செ.வெ.எண்.06 நாள்: 05.04.2019

தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 2019 நாடாளுமன்ற மற்றும் சட்டபேரவை தேர்தலை முன்னிட்டு 16.04.2019 காலை 10.00 மணிமுதல் 18.04.2019 நள்ளிரவு 12 மணிவரை மற்றும் ஓட்டு எண்ணிக்கை நடைபெறும் நாளான 23.05.2019 அன்றும் டாஸ்மாக் மதுபானக் கடைகள் மூடப்பட்டிருக்க வேண்டும் – மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் 2019 நாடாளுமன்ற மற்றும் சட்டபேரவை தேர்தலை முன்னிட்டு 16.04.2019 காலை 10.00 மணிமுதல் 18.04.2019 நள்ளிரவு 12 மணிவரை மற்றும் ஓட்டு எண்ணிக்கை நடைபெறும் நாளான 23.05.2019அன்றும், தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடை / பார்) விதிகள் 2003 விதி 12 துணைவிதி (2)-ன் படி தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள அனைத்து டாஸ்மாக் மதுபானக் கடைகள், அதனுடன் இணைந்த மதுக்கூடங்கள் மற்றும் அனைத்து எப்.எல்.2, மற்றும் எப்.எல்.3 உரிமதலங்களில் அமைந்துள்ள மதுக்கூடங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தினத்தில் மதுபான விற்பனை, மதுபானத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கடத்துதல், மதுபானத்தை பதுக்கி வைத்தல் போன்ற செயல்கள் கண்டறியபட்டால் சம்மந்தப்பட்ட நபர்கள் மீது தமிழ்நாடு மதுவிலக்கு அமலாக்கச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.